**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.109/2022 |
| Deposition of Witness for | : | PW – 3 |
| Name and Age | : | சங்கீதா (வயது 40) |
| Father / Husband Name | : | க/பெ. நவீன் |
| Occupation | : | மயக்கவியல் துறையில் மேற்படிப்பு |
| Village | : | திருவண்ணாமலை |
| Taluk | : | திருவண்ணாமலை |

**நாள்** – 11.05.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused absent. Petition U/s.355 BNSS filed and allowed.**

**PW– 3**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை அரசு மருத்துவ கல்லூரியியல் மயக்கவியல் மேற்படிப்பு படித்து வருகிறேன். கடந்த 23.09.2021–ம் தேதி நான் பாலக்கோடு அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது துரை என்பவரது மனைவி அங்கம்மாள் (வயது 26) என்பவரை சிகிச்சைக்கு அவரது கணவர் துரை மூலம்23.09.2021–ம் தேதி காலை 08.40 மணிக்கு அழைத்துவரப்பட்டார். அவரை அதே நாள் காலை 07.00 மணியளவில் தன்னை இரண்டு அடையாளம் தெரிந்த நபர்கள் அவரது வீட்டின் அருகே கோளாலால் தாக்கியதாகவும், கடித்ததாகவும் கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. இடது பக்க புருவத்தில் கடித்ததற்கான காயம் காணப்பட்டது 0.5X3X0.1 செ.மீ அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது.
2. இடது மோதிர விரலில் 0.5X0.1 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது.
3. இடது பக்க தொடையில் வலி இருப்பதாக கூறினார்.

அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு கார்பன் நகல் அ.சா.ஆ.2–ஆகவும்**

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.11 16:54:55 +0530

**மற்றும் என்னிடம் காட்டப்படும் காயச்சான்று அ.சா.ஆ.3–ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை என்று விசாரித்தார்கள் என நினைவில்லை. அங்கம்மாள் தன்னை இரண்டு நபர்கள் தாக்கியதாக கூறினார். பொதுவாக ஒரு நபர் கடித்தால் காயம்பட்ட இடத்தில் பல் அச்சு காணப்படும் என்றால் சரிதான். 1–வது காயம் கிழிந்த காயம் என்றால் சரிதான். வழக்கின் 1வது காயம் தலையில் வைத்திருக்கும் சுமையை இறக்கும்போது புருவத்தின் மீது சுமை படும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். 2 மற்றும் 3 காயங்கள் வழக்கிற்காக பாசாங்கு செய்ய இயலும் என்றால் சரிதான்.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.11 16:55:01 +0530

Judicial Magistrate,
Palacode.